# கோவையில் இரண்டு வயது குழந்தைக்கு எச்ஐவி ரத்தம்
## தந்தை பகீர் புகார்

கோவை, பிப்.19-

இரண்டு வயது பெண் குழந்தைக்கு எச்ஐவி ரத்தம் ஏற்றப்பட்டதாக கோவை அரசு மருத்துவமனை மீது குழந்தையின் தந்தை எழுப்பிய புகாரால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர் விஸ்வநாதன், மனைவி சித்ரா இத்தம்பதிகளுக்கு திருச்சி அரசு மருத்துவமனையில் கடந்த2017 ஆம் ஆண்டு மார்ச் 6 ஆம் தேதி ஆண்,பெண் என இரட்டைக் குழந்தை பிறந்தது. இதில் ஆண் குழந்தை ஆரோக்கியமாக இருந்தது. பெண் குழந்தை மட்டும் 700 கிராம் மட்டுமே எடையிருந்ததால் தீவிரசிகிச்சையளித்தனர். இதில் 32 நாட்களுக்குப் பின் குழந்தையின் எடை 1400 கிராமாக அதிகரித்தது. சிகிச்சை முடிந்து குழந்தையை பெற்றோர் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். இதனையடுத்து விஸ்வநாதன் தன் குடும்பத்துடன் திருப்பூர் மாவட்டத்துக்கு வந்து விசைத்தறி கூடத்தில் பணிபுரிந்து வந்தார். இந்நிலையில் பெண் குழந் தைக்கு காய்ச்சல் ஏற்பட்டதால் கடந்த 11.7.18அன்று திருப்பூர் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு இருதய நோய் இருப்பதாக கூறி அன்றே கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். கோவை அரசு மருத்துவமனையில் குழந்தைக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் 12 ஆம் தேதி இரவு ரத்தம் ஏற்றினர். சிகிச்சைக்கு பின்னர் குழந்தையுடன் பெற்றோர் 13 ஆம்தேதி வீடு திரும்பினர்.இந்நிலையில், கடந்த பிப்.8 ஆம் தேதிஅந்த குழந்தையின் உடலில் கட்டிகள் ஏற்பட்டதால் கோவை அரசு மருத்துவமனையில் மீண்டும் அனுமதித்தனர். அங்கு ரத் தம் பரிசோதிக்கப்பட்டதில் குழந்தைக்கு எச்ஐவி பாதிப்பு இருப்பது தெரிந்தது. இதைகேட்ட குழந்தையின் பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர். மேலும், எங்கள் இருவருக்கும் எச்.ஐ.விபாதிப்பு இல்லை. அப்படி இருக்கும்போது எங்கள் குழந்தைக்கு எப்படி எச்ஐவி பாதிப்புஏற்பட்டிருக்கும். கோவை அரசு மருத்துவமனையில் குழந்தைக்கு ஏற்றப்பட்ட ரத்தத்தின் மூலமாகத்தான் எச்ஐவி பரவியிருக்கும் என்று அவர்கள் குற்றம் சாட்டினர். இதன் காரணமாக செவ்வாயன்று கோவை அரசுமருத்துவமனையில் பரபரப்பு நிலவியது.இதுகுறித்து கோவை அரசு மருத்துவமனை முதல்வர் அசோகன் செய்தியாளர் களிடம் கூறுகையில், இந்த குழந்தை திருச்சிஅரசு மருத்துவமனையில் பிறந்தபோது 700 கிராம் எடைதான் இருந்தது. பிறகு தீவிரசிகிச்சை பிரிவில் கண்காணித்து சிகிச்சை அளித்துள்ளனர். பிறகு பல்வேறு மருத்துவமனைகளில் குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்தஆண்டு ஜூலை மாதம் 11 ஆம் தேதி கோவைஅரசு மருத்துவமனைக்கு குழந்தையை சிகிச்சைக்காக அழைத்து வந்தபோது சிகிச்சை அளிக்கப்பட்டது.

அப்போது குழந்தைக்கு பேக்ட் செல் (ரத்த அணுக்கள்)மட்டும் ஏற்றப்பட்டது. பிளாஸ்மா செல் மூலம்தான் எச்ஐவி தொற்று பரவும். பேக்ட்செல் மூலம் குழந்தைக்கு எச்ஐவி பரவவாய்ப்பு இல்லை. பேக்ட் செல் ஏற்றப்பட்டஉறையின் சீரியல் எண்ணை மீண்டும்வேலூர் பரிசோதனை கூடத்திற்கும் அனுப்பி சோதனை செய்து விட்டோம்.பேக்ட் செல் ரத்தம் அளித்த கொடையாளரிடமும் சோதனை செய்ததில் அவருக்கு எச்ஐவி தொற்று இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது. தம்பதியினர் பல்வேறு மருத்துவமனைகளில் குழந்தைக்கு சிகிச்சை அளித்துள்ளதால் அங்கு வைத்துகுழந்தைக்கு எச்ஐவி தொற்று பரவியிருக்கலாம். எச்ஐவியால் பாதித்துள்ள குழந் தைக்கு தற்போது ஏஆர்டி சிகிச்சை அளிக்கப்படுகிறது என்றார்.